கோயம்புத்தூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள சோளத்தில் ஆந்த்ராக்னோஸ் (21-24 சதவீதம்) மற்றும் ,லைக்கருகல் (25-30 சதவீதம்) நோய்களின் பாதிப்பு காணப்படுகிறது. இந்த நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு மேன்கோசெப் 75WP ஒரு கிலோ என்ற அளவில் இரு முறை ஒரு வார இடைவெளியில் தெளிக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப இதை 10 நாள் கழித்து திரும்பவும் தெளிக்கவும்.

**கம்பு**

கம்பில் தைப்பட்ட விதைக்குப்பதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 6 கிராம் வீதம் மெட்டலாக்ஸில் மருந்து கலந்து விதைப்பதால் அடிச்சாம்பல் நோய் பாதிக்காமல் தடுக்கலாம்.

***3. பயறு வகப்பயிர்கள்***

***உளுந்து***

*விருதுநகர் மாவட்டத்தில் புள்ளிக்காய்புழு தாக்குதல் காணப்பட்டது. இவற்றை கட்டுப்படுத்த*

- *ஏக்கருக்குகு **50** பறவை இருக்கைகள் வைத்து புழுக்களை கட்டுப்படுத்தலாம்.*
- *வளர்ந்த புழுக்களை சேகரித்து அழிக்கலாம்.*
- *ஏதேனும் ஒரு பூச்சிகொல்லி மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம்.*
- *பேசிலஸ் துரிண்சிஎன்சிஸ்* ***200- 250*** *மிலி /ஏக்கர் அல்லது தயோடிகார்ப் **75**%* WP @ ***250*** *கிராம் /ஏக்கர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

***துவரம்பருப்பு***

*புள்ளிக்காய்புழுவின் தாக்குதல் தருமபுரி மாவட்டத்தில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த ஒன்பது வரிசை துவரம்பருப்புக்கு ஒரு வரிசை சூரியகாந்தி பயிர் செய்ய வேண்டும். பறவை இருக்கை ஏக்கருக்கு **20** எண்கள் வைக்க வேண்டும்.*

- *புழுக்களை கைகளால் பொருக்கி அழிக்க வேண்டும்.*
- *பேசிலஸ் துரின்ஜியன்சிஸ்* ***5***% WP @ ***400*** *கிராம் /ஏக்கர்.*
- *குளோரன்ட்ரான்லிபுரோல்* ***18.5*** SC @ ***60*** *மிலி / ஏக்கர் அல்லது குளோர்பைரிபாஸ்* ***20*** EC @ ***200*** *மிலி / ஏக்கர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

*உளுந்து மற்றும் மற்ற பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளில் சாம்பல் நோய் பாதிப்பு தென்படுகிறது. இந்நோயை கட்டுப்படுத்த எக்டருக்கு கார்பன்டாசிம் **50*** WP @ ***500*** *கிராம் அல்லது ஹெக்சாகோனசோல் **5*** EC @ 5***00*** *மில்லி அல்லது நனையும் கந்தகம் **80*** WP @ ***1.25*** *கிலோ தெளிக்கவும். தேவைப்பட்டால் **15** நாட்கள் கழித்து ஒரு முறை தெளித்துக் கட்டுப்படுத்தலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளில் இலைப்புள்ளி நோயானது **8** சதவீதம் வரை கண்டறியப்பட்டுள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த எக்டருக்கு கார்பன்டசிம் **50***% WP @ ***500*** *கிராம் அல்லது மேன்கோசெப் **75***% WP @ ***1*** *கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும்.*

***4. எண்ணெய் வித்துக்கள்***

***நிலக்கடலை***

*தத்துப்பூச்சி தாக்குதல் கடலூர் மாவட்டத்தில் காணப்பட்டது. தத்துப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த **4** வரிசை நிலக்கடலைக்கு ஒரு வரிசை மொச்சையை பயிர் செய்ய வேண்டும். குவினால்பாஸ் **25*** % EC 260 *மிலி / ஏக்கர் அல்லது மீத்தைல் டெமெட்டான் **25*** % EC 400 *மிலி / ஏக்கர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

- புரோடீனியா புழுவை கட்டுப்படுத்த நிலக்கடலை வயல்களின் ஓரங்களில் ஆமணக்குச் செடிகளைப் பொறிப்பயிராகப் பயிரிடுவதன் மூலம் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.
- விளக்குப் பொறி ஏக்கருக்கு ஒன்று மற்றும் இனக்கவர்ச்சிப் பொறி ஏக்கருக்கு 5 கொண்டு அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும்.
- முட்டைகளைச் சேகரித்து அழிக்கவும்.
- கூட்டமாக வாழும் இளம் புழுக்களை ஆமணக்கு, தட்டைப்பயறு மற்றும் நிலக்கடலை இலைகளில் இருந்து சேகரித்து அழிக்கவும்.
- ஒரு ஏக்கருக்கு மீத்தோமைல் 40% எஸ். பி. 300 கிராம் தெளித்து இளம் புழுக்களை அழிக்கவும்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலி மற்றும் தம்ரிப்பேட்டை கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலையில் கழுத்து அழுகல் நோயின் தாக்குதல் 3 முதல் 5 சதவீதம் கண்டறியப்பட்டுள்ளது. இந்நோயை மேலாண்மை செய்ய பாதிக்கப்பட்ட செடிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள செடிகளுக்கு கார்பென்டாசிம் 50 WP @ 1 கிராம் / லிட்டர் நீரில் கலந்து வேரைச்சுற்றி மண்ணில் ஊற்றவும். மேலும் வரும் பருவத்தில் நிலக்கடலை விதைக்கும் போது *டிரைகோடர்மா விரிடி* ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

தஞ்சாவூர் வட்டாரம் நாகப்ப உடையாண்பட்டி கிராமத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் வயல்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுகளின் முடிவில் (28 சதம் செடிகள் டைலங்கோரிங்கஸ் நூற்புழுக்களினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது மேலும், 200 கிராம் மண் மாதிரிகளில் 92 நூற்புழுக்கள் பதிவு செய்யப்பட்டது. **பரிந்துரைகள்:** வேப்பம் பிண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ என்ற விகிதத்தில் இடுதல். நடவு வயலில் ஒரு ஹெக்டருக்கு 33 கிலோ கார்போபியூரான் குருணை மருந்தை இடுதல்.

**ஆமணக்கு**

ஆமணக்குப் பயிரில் இலைப்பேன் மற்றும் தத்துப்பூச்சி தாக்குதல் விருதுநகர், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் காணப்பட்டது. தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த 15 நாட்கள் இடைவெளியில் அசிடாமிப்பிரைட் 20% SP 40 கிராம், ஏக்கர் அல்லது குளோதயாடின் 50 % WDG 20 கிராம் / ஏக்கர் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. இலைப்பேன்களை கட்டுப்படுத்த 15 நாட்கள் இடைவெளியில் கீழ்க்காணும் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும். டைமீத்தோயேட் 30 % ஈ.சி. 330 மி.லி., ஏக்கர் அல்லது இமிடாக்குளோப்பிரிட் 17.8 % எஸ்.எல். 50 மி.லி. / ஏக்கர்.

*சேலம் மாவட்டத்தில் சின்ன சேலம் வட்டாரத்தில் பூசப்பாடி கிராமத்தில் ஆமணக்கு பயிரில் சாம்பல் பூசாண (*Gray mold*) நோயின் தாக்குதல்* 5 *சதவீத அளவில் காணப்பட்டது. இதனை புரோபிகொனசோல்* 25 EC *எக்டருக்கு **500** மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

***5. பருத்தி***

*விருதுநகர் மாவட்டத்தில் தத்துப்பூச்சி, அசுவினி தாக்குதல் காணப்பட்டது. இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த இம்மிடாகுளோபிரிட்* 17.8 % SL***50*** *மி.லி. / ஏக்கர் அல்லது பிப்ரோபேசின்* 25% SC 400 *மி.லி./ ஏக்கர் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

*இளம் சிவப்பு காய்ப்புழு தாக்குதல் கோவை மாவட்டத்தில் காணப்பட்டது. இவற்றைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப்பொறி ஏக்கருக்கு **5** எண்கள் வைக்கவேண்டும்*

- *ட்டிரைக்கோக்கிரம்மா முட்டை ஒட்டுண்ணி ஏக்கருக்கு **16000**, நட்ட **45** நாட்கள் முதல் **15** நாட்கள் இடைவெளியில் மூன்று முறை விடவும்.*
- *இமாமெக்டின் பென்சோயேட்* 5% SG 90 *கிராம் / ஏக்கர் அல்லது டைப்புழுபென்சியூரான்* ***2***5%WP 120 *கிராம்/ ஏக்கர் அல்லது தையோடிகார்ப் **75*** WP ***400*** *கிராம் / ஏக்கர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

*கோவை, திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பருத்தி பயிரில் வேர் அழுகல; நோயின் தாக்கம் அதிக அளவில் காணப்பட்டது. வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டாசிம் **50*** WP ***1*** *கிராம் அல்லது ட்ரைபிளாக்சிஸ்ட்ரோபின் + டிபுகோனாசோல்* 75 WG ***0.75*** *கிராம் என்ற அளவில் கலந்து வேர் பகுதி நனையும்படி ஊற்ற வேண்டும்.*

***6. கரும்பு***

*இடைக்கணுப்புழு, இளநிலை தண்டுத்து துளைப்பான் தாக்குதல் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் காணப்பட்டது. இடைக்கணுப்புழுவைக் கட்டுப்படுத்த நட்ட நான்கு மாதம் முதல் ட்ரைக்கோக்கிரம்மா முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு ஒரு சி சி என்ற அளவில் **15** நாட்கள் இடைவெளியில் **6** முறை விடவும். முட்டை ஒட்டுண்ணி வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோவையில் கிடைக்கிறது.*

*இளநிலை தண்டுத் துளைப்பான்களைக் கட்டுப்படுத்த ஸ்டர்மியாப்சிஸ் இன்பரன்ஸ் என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு **50** சினையுற்ற பெண் ஈக்கள் ஈன்ற எண்ணிக்கையில் நட்ட **30** மற்றும் **45** வது நாட்களில் விடவும். இது கரும்பு இனப்பெருக்க நிலையம், கோவையில் கிடைக்கிறது. நட்ட **45** நாளில் துாரில் மண் அணைக்க வேண்டும். குளோரான்ட்ரானிலிபுரோல் **18.5** எஸ்.சி. **375** மி.லி., ஏக்கர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

### மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போயங் நோய்

கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போயங் நோய் தாக்குதல் அரியலூர் பெரம்பலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் காணப்பட்டது. இதனை கட்டுப்படுத்த.

- கரணை நேர்த்தி : புரோபிகனசோல் 25 EC @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மிலி (30 நிமிடம் ஊறவைத்தல்) + இமிடாகுளோபிரிட் 70WS @ ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மிலி (20 நிமிடம் ஊறவைத்தல்).
- தொடர்ந்து வயலில் எறும்பு நடமாட்டத்தை கவனிக்க வேண்டும்.
- எறும்பின் இயக்கத்தை கவனித்த பிறகு உடனடியாக மூன்று எல்லை வரிசைகளில் மட்டும் இமிடாகுளோபிரிட் 17.8 SL @ 3 மிலி / 10 லி (அல்லது) குளோரோடிரனிலிப்ரோல் 18.5 SC @ 4 மிலி / 10 லி (அல்லது) கிளாதினிடின் 50 WDG @ 5கி / 10 லி (அல்லது) ஸ்பைரோடெட்ராமெட் 150 OD @ 12.5 மிலி / 10 லி (அல்லது) பிளானிகேமிட் 50 WG @ 3 கி / 10 லி தெளிக்கவும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக கரும்பு பூஸ்டர் முறையே 1 கிகி, 1.5 கிகி மற்றும் 2 கிகி-யை நடவு செய்த 45, 60, 75 நாட்களுக்கு பிறகு தெளிக்கவும். (பரிந்துரைக்கப்பட்ட வேளாண் நடைமுறை)
- பொருளாதார வரம்பு நிலையான 10% மாவுப்பூச்சி தாக்குதல் தென்பட்டவுடன், பின்வரும் மருந்துகளை கரும்பின் குருத்துப் பகுதியை நோக்கி தெளிக்கவும் : புரோபிகனசோல் 25 EC @ 1 மிலி + இமிடாக்ளோப்பிரிட் 17.8 SL @ 3 மிலி + ஒட்டும் பசை 1 மிலி + நீர் 1 லி நட்ட 3 மாதங்களில் இருந்து 3 முறை 20 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- தெளிப்பதற்கு முன் தோகை அகற்றுதலை உறுதி செய்யவும்.
- பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்களை ஒவ்வொரு மறுதாம்புவிற்கு பிறகும் மண் அணைக்கும் போது இட வேண்டும்.

### மஞ்சள் இலை நோய்

கடலூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பயிரில் மஞ்சள் இலை நோய் காணப்படுகிறது. இந்நோயை கட்டுபடுத்த நடவு செய்ய நோயற்ற கரணைகள் பயன்படுத்தவும். கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுதாம்பு பயிரைத் தவிர்க்கவும். பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்களைப் பயன்படுத்துவும். எளிதில் பாதிக்க கூடிய கரும்பு ரகங்களான CoV 09356 மற்றும் இனம் தெரியாத இரகங்கள் நடவு செய்வதை தவிர்க்கவும். கரும்பு தோகைகளை அகற்றி பயிர்களை களை இல்லாத நிலையில் பராமரிக்கவும்.

***நூற்புழுக்கள்***

*தஞ்சாவூர் வட்டாரம் கருங்குளம் கிராமத்தில் கரும்பு சாகுபடி செய்யும் வயல்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுகளின் முடிவில் **18** சதம் பயிர்கள் வேரழுகல் நூற்புழுக்களினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. மேலும் **200** கிராம் மண்ணில் **59** நூற்புழுக்கள் பதிவு செய்யப்பட்டது. **பரிந்துரைகள்:** வேப்பம் பிண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு **250** கிலோ என்ற விகிதத்தில் இடுதல். நடவு வயிலில் ஒரு ஹெக்டருக்கு **33** கிலோ கார்போபியூரான் குருணை மருந்தை இடுதல்.*

***7. காய்கறிப்பயிர்கள்***

***தக்காளி***

*தக்காளி பயிரில் புள்ளி வாடல், இலை சுருட்டு மற்றும் முன்பருவ இலைக்கருகல் நோய்களின் தாக்குதல் கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பரவலாக காணப்படுகிறது. நச்சுயிரிகளை முறையே பரப்பும் இலைப்பேன்கள் மற்றும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த டைமீதோயேட்* 30 EC @ ***500** மி.லி./ எக்டர் அல்லது இமிடாகுளோபிரிட்* 17.8 SL @ ***100** மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கலாம். பூச்சிக் கொல்லி மருந்தை **15** நாட்கள் இடைவெளியில் நோயின் தீவிரத்தைப் பொறுத்து மீண்டும் தெளிக்கவும். முன்பருவ இலைப்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த மேன்கோசெப்* 75%WP *என்ற பூசணக்கொல்லியை எக்டருக்கு **500** கிராம் **(அ)** அசாக்சிஸ்ட்ரோபின் + டைபென்கோனாசோல் **500**மிலி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.*

***மிளகாய்***

*இலைப்பேன் தாக்குதல் தேனி மற்றும் மதுரை மாவட்டத்தில் காணப்பட்டது. இலைப்பேன் மற்றும் இலைச்சிலந்தி தாக்குதல் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் காணப்பட்டது.*

*இலைப்பேன் தாக்குதலைக் கட்டுப்படுத்த அகத்தியை ஊடுபயிராக பயிர்செய்ய வேண்டும். இமிடாக்குளோப்பிட்*17.8 SL ***3** மிலி **/** **10** லிட்டர் அல்லது இமாமெக்டின் பென்சோயேட்* 5% SG 4 *கிராம்* / 10 *லிட்டர் அல்லது அசிடாமிபிரைடு **20*** SP ***10** கிராம் / **10** லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

*இலைச்சிலந்தி தாக்குதலைக் கட்டுப்படுத்த பெனாசாகுயின்* 10 EC @ 2 *மிலி/ லிட்டர் அல்லது பென்பைராக்சிமேட்* 5 EC @ 10 *மிலி*/10 *லிட்டர் அல்லது புராபெர்கைட்* 57 EC @ 25 *மிலி*/ 10 *லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

*திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய் பயிரில் இலை சுருட்டு மற்றும் தேமல் நோய்களின் தாக்குதல் காணப்படுகிறது. இந்த வைரஸ் நோய்களைப் பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த டைமீதோயேட்* 30 EC @ ***500** மி.லி./ எக்டர் அல்லது*

*இமிடாகுளோபிரிட் 17.8 SL @ **100** மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கலாம். மேலும், நோய் தாக்குண்ட செடிகளை அகற்றி விடவும். பூச்சிக் கொல்லி மருந்தை **15** நாட்கள் இடைவெளியில் நோயின் தீவிரத்தைப் பொறுத்து மீண்டும் தெளிக்கவும்.*

***கத்தரி***

*தேனி, கோவை, விருதுநகர், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் குருத்து மற்றும் காய்துளைப்பான் தாக்குதல் காணப்பட்டது. இவற்றை கட்டுப்படுத்த தாக்குதலின் ஆரம்ப நிலையில் சேதமடைந்த பகுதிகளை சேகரித்து அழிக்க வேண்டும். செயற்கை வகை பைரித்ராய்டு மருந்துகளை தெளிக்க கூடாது. வேப்ப விதைச்சாறு **5** சதம் **(25** கிலோ/ஹெக்டர்**)** அல்லது அசாடிராக்கடின் **1** சதம் **30** மிலி/ **10** லிட்டர் அல்லது இமாமெக்டின் பென்சோயேட் **5**% SG **4** கிராம் / **10** லிட்டர் அல்லது தயோடிகார்ப் **75**% WP **20** கிராம்/**10** லிட்டர் அல்லது புழுபென்டியமைடு **20**% WDG **7.5** கிராம் / **10** லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

*கோவை மாட்டத்தில் தத்துப்பூச்சி தாக்குதல் காணப்பட்டது. இதனைக்கட்டுப்படுத்த டைநொட்டாபியூரான் **70**% WG **1.7** கிராம் / **10** லிட்டர் அல்லது டைமீத்தோயேட் **30**% EC **10** மிலி / **10** லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

***வெண்டை***

*காய்புழுக்களின் தாக்குதல் மதுரை மாவட்டத்தில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சிப்பொறி ஏக்கருக்கு **5** எண்கள் வைக்கவும். சேதமடைந்த காய்களை சேகரித்து அழிக்கவும், ட்ரைக்கோக்கிரம்மா முட்டை ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு ஒரு சிசி என்ற அளவில் விடவும், குவினால்பாஸ் 25 % EC **8** மிலி / **10** லிட்டர்அல்லது இமாமெக்டின் பென்சோயோட் 5% SG **2** கிராம் / **10** லிட்டர் தெளிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.*

*தத்துப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த இமிடாக்குளோப்பிரிட் **17.8**% SL **2** மிலி / **10** லிட்டர் அல்லது தாயமீத்தாக்சாம் **25**% WG ஒரு கிராம் / **10** லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

***புடலை***

*பழ ஈக்களின் தாக்குதல் கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் காணப்பட்டது. இதனைக்கட்டுப்படுத்த தாக்கப்பட்ட காய்களை சேகரித்து அழிக்க வேண்டும். கோடை உழவு செய்து மண்ணில் உள்ள கூண்டுப்புழுக்களை அழிக்க வேண்டும். சையான்ட்ரானில்புரோல் **10.26** %OD 1.8 மிலி /லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.*

***மரவள்ளி கிழங்கு***

*சேலம் மாவட்டத்தில் வெள்ளை ஈக்கள், மாவுப்பூச்சி மற்றும் இலைச் சிலந்தி தாக்குதல் காணப்பட்டது. செம்பேன் தாக்குதலைக் கட்டுப்படுத்த பெனாசாகுயின் **10** % EC **20** மி.லி. / **10***

லிட்டர் அல்லது புராப்பர்கைட் 20% EC 20 மி.லி./ 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

வெள்ளை ஈக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த துத்தி போன்ற கலைச்செடிகளை அழிக்க வேண்டும். ஏக்கருக்கு 5 எண்கள் மஞ்சள் நிற ஒட்டுப்பொறி வைக்கவேண்டும். தழைச்சத்து உரத்தை பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேப்பெண்ணை 3 சதம் (30 மி.லி. / லிட்டர்) தெளிக்க வேண்டும் அல்லது மீன் அமில ரோசின் சோப்பு 25 கிராம் /லிட்டர் அல்லது மீத்தைல் டெமெட்டான் 25 % EC 20 மி.லி./ 10 லிட்டர் என்ற அளவில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த *அனாகைரஸ் லோப்பசி* எனும் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100-200 எண்கள் மற்றும் பச்சை கண்ணாடி இறக்கை பூச்சி என்ற இறை விழுங்கி முட்டை ஏக்கருக்கு 400 எண்கள் என்ற அளவில் மாவுப்பூச்சியின் மூன்றாம் பருவம் அல்லது வளர்ந்த பெண் பூச்சிகள் இருக்கும் நிலையில் விடவேண்டும். இந்த ஒட்டுண்ணி மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், சேலம் மாவட்டத்தில் கிடைக்கிறது. பச்சை கண்ணாடி இறக்கை பூச்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவையில் கிடைக்கிறது.

## 8. பழப்பயிர்கள்

### திராட்சை

இலைப்பேன்களின் தாக்குதல் தேனி மாவட்டத்தில் காணப்பட்டது. இதனைக்கட்டுப்டுத்த சாயாண்ட்ரானிலிப்புரோல் 10.26 OD 8 மிலி / 10 லிட்டர் அல்லது இமாமெக்டின்பென்சொயேட் 5 SG 40 கிராம் / 10 லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

பிலி வண்டுகளைக் கட்டுப்படுத்த தண்டுப்பகுதியில் உள்ள காய்ந்த பட்டைகளை அகற்ற வேண்டும். இமிடாக்ளோப்பிரிட் 17.8 SL 2 மிலி / 10 லிட்டர் அல்லது சாயாண்ட்ரானிலிப்புரோல் 10.26 OD 7 மிலி / 10 லிட்டர் அல்லது மாலத்தியான் 50 EC 10 மிலி/ 10 லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சையில் சாம்பல் நோயின் பாதிப்பு காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த ஹெக்சாகோனசோல் 5 EC @ 1 மில்லி / லிட்டர் அல்லது நனையும் கந்தக தூள் 80 WP @ 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் நீரில் கலந்து தெளிக்கலாம்.

### வாழை

கோவை மாவட்டத்தில் வாழைப்பழத்தில் இலைப்பேன் தாக்குதல் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 30 EC 10 மிலி / 10 லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

*சிகாடோகா இலைப்புள்ளிநோய் வாழை பயிரிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பரவலாக காணப்படுகிறது. இந்நோயை கட்டுப்படுத்த*

- *மிகவும் பாதித்த ஒன்று அல்லது இரண்டு அடி இலைகளை அகற்றி எரித்து அல்லது மண்ணில் புதைத்து விடவும்.*
- *கார்பன்டாசிம் 50 WP @ 500 கி / எக்டருக்கு அல்லது மான்கோசெப் 1000 கி / எக்டருக்கு ஒரு மாத இடைவெளியில் தெளிக்கவும்*
- *மாற்றாக புரோபிகொனசோல் 25 EC 500 மிலி / எக்டர் + மினரல் எண்ணெய் 10 மிலி / 1 லிட்டருக்கு கலந்து தெளிக்கவும். ஒட்டும் திரவம் டீப்பால் அல்லது சோப்பு கரைசல் 5 மிலி / 10 லிட்டர் மருந்து கரைசலுடன் சேர்க்கவும்.*

***எலுமிச்சை***

*மதுரை மாவட்ட வாடிப்பட்டி கிராமத்தில் எலுமிச்சை மரங்களில் 19.04 சதம் வரை பாக்டீரிய துரு (கேன்கர்) நோய் தாக்குதல் காணப்பட்டது. கடுமையாக பாதிக்கப்பட்ட மரக்கிளைகளை வெட்டி நீக்கி விட்டு, காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை 0.3 சதம் அளவில் இளம் இலைகள் மற்றும் காய்கள் நன்கு நனையுமாறு தெளிக்க அறிவுறுத்தப்படுகிறது. நோய் மேலும் பரவாமல் இருக்க ஸ்டரெப்டோமைசின் + டெட்ராசைக்ளின் 1 லிட்டர் தண்ணீருக்கு 0.1 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு லிட்டருக்கு 3 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.*

***கொய்யா***

*கொய்யா மரங்களில் வேர்முடிச்சு நூற்புழு தாக்கம் தமிழகத்தில் கோயமுத்தூர், திண்டுக்கல், கடலூர், மதுரை, தென்காசி, விருதுநகர், புதுகோட்டை, திருவண்ணமலை மற்றும் கடலூர் மாவட்டங்களில் காணப்படுகிறது. இந்நூற்புழுக்கள் தாக்குதலால் இலைகள் பழுப்பு நிறமாகி தொடர்ந்து மஞ்சள் நிறமாகி சுருண்டு காணப்படும். வேர் பகுதிகளில் வேர் முடிச்சுகள் காணப்படும் மேலும் வேர்கள் கருப்பு நிறமாகி அழுகியும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த 2.5 கிலோ பர்புரியோசிலியம் லிலாசினம் (பெசிலோமைசஸ் லில்லாசினஸ்) மற்றும் 2.5 கிலோ பொக்கோனியா கிளோமிடோஸ்போரியா உயிரினக் கலவையை 100 கிலோ தொழு உரம் கலந்து 15 நாட்களுக்கு நிழலில் வைத்து நீர் தெளித்து வைக்க வேண்டும். பின்னர் இந்த உயிரினக் கலவையை மரத்திற்கு 500 கிராம் வீதம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இடவேண்டும். கேந்தி மலர் செடியை மரத்தைச் சுற்றி வளர்க்க பரிந்துரைக்கப்படுகிறது. நூற்புழுக்கள் அதிகமுள்ள இடங்களில் ஒரு ஏக்கருக்கு புளூபைரம் 500 மில்லி லிட்டர் அதனை தொடர்ந்து கார்பைன்டாசிம் 2 கிராம், 1 லிட்டர் தண்ணீர் மற்றும் பைடோலான் 2 கிராம், 1 லிட்டர் நீரில் கலந்து மரத்தை சுற்றி ஊற்றவும் பரிந்துரைக்கப்படுகிறது.*

## 9. வாசனை மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள்

### கருவேப்பிலை

*சில்லிடு அல்லது குதிக்கும் பூச்சி மற்றும் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் கோவை மாவட்டத்தில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த தயாமீத்தாக்சாம்* 25% WG *4 கிராம் / 10 லிட்டர் பரிந்துரைக்கப்படுகிறது. இலைச்சுருட்டுப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த குளோரான்ட்ரானிலிப்புரோல்* 18.5 % SC 3*மிலி /10 லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. நன்மை செய்யும் பூச்சிகளை அதிகரிக்க ஊடுபயிராக தட்டைப்பயரையும் தடுப்புப் பயிராக சோளத்தையும் பயிர் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.*

### தென்னை

*வெள்ளை ஈக்கள், எரியோபைட் சிலந்திகள் மற்றும் காண்டா மிருக வண்டு தாக்குதல் எல்லா மாவட்டங்களிலும் காணப்பட்டது. சிவப்புக்கூண் வண்டு தாக்குதல் கோவை மாவட்டத்தில் காணப்பட்டது. கருந்தலைப்புழு மற்றும் சிவப்புக்கூண் வண்டு தாக்குதல் வேலூர் மாவட்டதில் காணப்பட்டது.*

### வெள்ளை ஈக்கள்

- *மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களால் உருவாக்கப்பட்ட, இரண்டு புறமும் விளக்கெண்ணெய் தடவப்பட்ட மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி* x *அகலம் 1.5 அடி) ஏக்கருக்கு 8 வீதம் 6 அடி உயரத்தில் தொங்கவிட்டும் அல்லது தென்னை மரங்களின் தண்டுப்பகுதியில் சுற்றியும் ஈக்களின் நடமாட்டத்தை கண்காணித்தும் கவர்ந்தும் அழிக்கலாம்.*
- *தாக்கப்பட்ட மரங்களில் உள்ள கீழ்மட்ட ஓலைகளின் உட்பகுதியில் படுமாறு விசைத் தெளிப்பானைக் கொண்டு மிக வேகமாக தண்ணீரை பீய்ச்சி அடித்து தெளிப்பதன் மூலமாகவும் ஈக்களின் எண்ணிக்கை பெருகுவதை குறைக்கலாம்.*
- *வெள்ளை ஈக்களின் இளங்குஞ்சுகளை கட்டுப்படுத்தும், திறன் கொண்ட ஒட்டுண்ணி குளவி என்கார்சியா* (*Encarsia guadeloupae*) *கூட்டுப்புழு பருவத்தில் தென்னை ஓலைகளில் ஏக்கருக்கு 10 இலை துண்டுகள் வீதம் 10 மரத்திற்கு ஒரு இலைத்துண்டு என்ற எண்ணிக்கையில் தாக்கப்பட்ட ஓலைகளின் மீது 10 மரம் இடைவெளியில் வைத்தும், கட்டுப்படுத்தலாம்.*
- *கிரைசோபிட் (Chrysopid) என்ற பச்சை கண்ணாடி இறக்கை பூச்சி இரைவிழுங்கி முட்டைகளை ஏக்கருக்கு 400 வீதம் தாக்கப்பட்ட மரங்களில் வைத்தும் கட்டுப்படுத்தலாம்.*
- *சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலால் பின்விளைவாக ஏற்படும் கரும்பூசணத்தை கட்டுப்படுத்த மைதா மாவு பசை* (Paste) *கரைசலை ஒரு லிட்டர் தண்ணீரில் 25 கிராம் மற்றும் ஒட்டும் திரவம் ஒரு மிலி சேர்த்து கீழ் இலை அடுக்குகளில் படிந்திருக்கும் கரும்புசாணங்களின் மேல் நன்றாக படுமாறு தெளிக்கவும். மைதா மாவு பசை தெளித்த 3*

முதல் 5 நாட்களில் இலைகளில் படிந்திருந்த கருப்பூசணங்கள் வெயிலில் காய்ந்து உதிர்ந்துவிடும்.

- சுருள் வெள்ளை ஈக்களை அழிக்கும் திறன் படைத்த இயற்கை எதிரிகளான *என்கார்சியா* ஒட்டுண்ணி குளவிகள், கிரைசோபிட் இரைவிழுங்கிகள், *கைலேகோரிஸ்* என்ற பொறி வண்டுகளை தோப்புகளில் இயற்கையாக பல்கி இனப்பெருக்கம் அடைய ஏதுவாக சாமந்தி பூ, சூரியகாந்தி, தட்டைப்பயறு போன்ற பயிர்களை தென்னந்தோப்புகளில் பயிர்செய்ய வேண்டும்.
- செயற்கை பைரித்திராய்டு மற்றும் இரசாயன பூச்சிக் கொல்லிகள் இயற்கை எதிரிகளை அழித்து விடுவதால் அவற்றை அறவே பயன்படுத்தவே கூடாது.
- பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை**

- இறந்த மரங்களை அப்புறப்படுத்தி எரித்து விடவும்.
- எருக்குழியில் காணப்படும் புழுக்கள் மற்றும் கூட்டுப்புழுக்களைச் சேகரித்து அழிக்கவும்.
- மூன்று அந்துருண்டைகளை நடுக்குருத்தைச் சுற்றியுள்ள 3 மட்டை இடுக்குகளில் ஒன்று வீதம் வைக்கவும் அல்லது வேப்பங்கொட்டை தூள் 150 கிராம் மற்றும் காய்ந்த மணல் 300 கிராம் என்ற அளவில் கலந்து நடுக்குருத்துப் பகுதியில் தூவி விடலாம்.
- எருக்குழியில் வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க மழைக்காலங்களில் பச்சை மஸ்கார்டின் (*Metarhizium anisopliae*) என்ற பூஞ்சாணத்தை $5x10^{11}$வித்துக்கள்/மீ$^3$ என்ற அளவில் ஊற்றலாம்.
- ரைனோலியூர் கவர்ச்சிப்பொறிகளை எக்டருக்கு ஒன்று வீதம் வைத்து ஆண் மற்றும் பெண் வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- கவர்ச்சிப்பொறிகளை தென்னை மரத்திலோ அல்லது ஓலைகளிலோ கட்டி வைப்பதை தவிர்க்கவும்.
- கவர்ச்சிப் பொறிகளில் விழும் வண்டுகளைக் கண்காணித்து உடனடியாக அழித்து விட வேண்டும்.
- ஆமணக்கு பிண்ணாக்கு 1 கிலோ 1 லிட்டர் தண்ணீருடன் உள்ள பானைகளை ஏக்கருக்கு 30 வீதம் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
- மரத்தின் குருத்துப் பாகத்தில் வண்டுகள் சேதப்படுத்திய துளைகளில் கம்பியை உட்செலுத்தி வளர்ந்த வண்டுகளை வெளியே எடுத்து அழித்து விடவேண்டும்.
- கோடை மற்றும் மழை காலங்களில் இரவு நேரத்தில் விளக்கு பொறிகளை ஏக்கருக்கு ஒன்று வீதம் வைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட மேலாண்மை முறைகளை ஒருங்கிணைத்து மேற்கொண்டால் தான் காண்டாமிருக வண்டின் தாக்குதலைக் குறைக்க முடியும்.

- தென்னை விவசாயிகள் கூட்டாக ஒன்று சேர்ந்து மேலாண்மை முறைகளை கடைப்பிடித்தால் கூடுதல் பலன் கிடைக்கும்.

**சிவப்பு கூன் வண்டு ஒருங்கிணைந்த மேலாண்மை**

- இவ்வண்டினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை ஆரம்ப நிலையில் கண்டறிவது கடினம் என்பதால் வரும் முன் காக்கும் வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- காண்டாமிருக வண்டின் தாக்குதல் கூன் வண்டின் தாக்குதலுக்கு வழிவகுப்பதால், பாதிக்கப்பட்ட தென்னந்தோப்புகளில் காண்டாமிருக வண்டை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
- மரத்தில் ஏற்படும் காயங்களில் கூன்வண்டு முட்டையிடுவதால், காயங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- பச்சை மட்டைகளை வெட்டுவதைத் தவிர்க்கவும், அவசியம் ஏற்பட்டால் தண்டுப் பகுதியிலிருந்து 3 அடி தள்ளி வெட்டவும்.
- இடி தாக்கிய, கூன் வண்டு தாக்கிய மரங்கள் தோப்பில் இருந்தால், உடனடியாக அப்புறப்படுத்தி, தீயிட்டு அழிக்க வேண்டும்.
- கவர்ச்சிப் பொறிகள் எக்டருக்கு ஒன்று வீதம் வைத்து சிவப்பு கூன் வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.
- கவர்ச்சிப் பொறியில் கவரப்படும் வண்டுகளை அவ்வப்போது கண்காணித்து அழிக்க வேண்டும்.

**எரியோபைட் சிலந்தியை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை**

- சரியான உர மற்றும் நீர் நிர்வாகம் செய்வதன் மூலம் மட்டுமே ஈரியோபையிட் சிலந்தியின் தாக்குதலை குறைக்க முடியும். தாக்கப்பட்ட மரங்களுக்கு யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2.0 கிலோ, பொட்டாஷ் 3.5 கிலோ, நுண்சத்து 1 கிலோ, ஜிப்சம் 1 கிலோ, வேப்பம் புண்ணாக்கு 5 கிலோ மக்கிய குப்பை 50 கிலோ, இந்த உர அளவுகள் ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு. இந்த உரத்தை இரண்டாக பிரித்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை இட வேண்டும்.
- தாக்கப்பட்ட மரங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் அசடிராக்டின் (1%) 3 மிலி (அல்லது) வேப்பெண்ணெய் 30 மி.லி/ லிட்டர். மருந்தினை லிட்டருக்கு ஒரு மி.லி. ஒட்டுத்திரவம் கலந்து ஜனவரி, மார்ச் மற்றும் மே மாதங்களில் தெளிக்கலாம். குறிப்பாக 45 நாள் குரும்பைகளில் தெளித்தால் போதுமானது.

- அசாடிராக்டின் 1% (10 மி.லி) மருந்தினை 100 மி.லி. தண்ணீருடன் கலந்து வேர் மூலம் செலுத்தவும். (வருடத்திற்கு மூன்று முறை).
- மேலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக்கை மரத்திற்கு 200 மில்லி என்ற அளவில் ஆறு மாத இடைவெளியில் வருடத்திற்கு 2 முறை வேர்மூலம் செலுத்தவும்.

**கருந்தலைப் புழுக்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்**

- மிகவும் பாதிக்கப்பட்ட அடிமட்ட இலைகளை மரத்தில் இருந்து 3 அடி விட்டு, வெட்டி எரித்து விடவும். இதனால் தாக்கப்பட்ட இலைகளில் உள்ள முட்டைகள், புழுக்கள் மற்றும் கூண்டுப்புழுக்கள் அழிக்கப்பட்டு சேதம் குறைகிறது.
- இரவு 7 மணி முதல் 11 மணி வரையில் ஏக்கருக்கு ஒரு விளக்குப் பொறிவைத்து அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்தும் கவர்ந்தும், அழிக்கலாம். இவ்வாறு செய்வதால் அந்தி பூச்சிகள் முட்டை இடுவது குறைந்து, தாக்குதல் தடுக்கப்படுகிறது.
- கருந்தலைப் புழுக்களின் தாக்குதல் ஆரம்ப நிலையில் இருக்கும் போது ஏக்கருக்கு 21 பாக்கெட் (2100 எண்கள்) பிரக்கானிட் ஒட்டுண்ணிகளை 21 நாட்கள் இடை வெளியில் 2 முதல் 3 முறை விட வேண்டும்.
- இந்த ஒட்டுண்ணி குளவிகள் கருந்தலைப்புழுவின் உடலில் முட்டையிட்டு கருந்தலைப்புழுக்களை அழிக்ககூடியவை. இவை தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகரில் கிடைக்கும்.

  தென்னைக்கு பரிந்துரைக்கப்பட்ட உரங்களான யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ் 3.5 கிலோ மக்கிய குப்பை -50 கிலோ, நுண்சத்து 1 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு 5 கிலோ இட்டு தேவையான அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இந்த அளவுகள் ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு. இந்த உர அளவுவை இரண்டாக பிரித்து 6 மாதத்திற்கு ஒரு முறை இட வேண்டும்.

**வேர்வாடல் நோய்**

தென்னையில் வேர்வாடல் நோயானது கோயம்புத்தூர், தேனி, தென்காசி, திருப்பூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பரவலாக காணப்படுகிறது. இந்நோயினை கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.

- மோசமாக பாதிக்கப்பட்ட மரங்களை வெட்டி அகற்ற வேண்டும்.
- சரியான வடிகால் வசதி செய்யவேண்டும்.
- பசுந்தாள் உரங்களான தட்டைப்பயறு, சணப்பை அல்லது தக்கைப்பூண்டு ஆகியவற்றை வட்டப்பாத்தி அல்லது தோப்பு பகுதி முழுவதும் வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுது விட வேண்டும்.
- பரிந்துரைக்கப்பட்ட அளவான ஒரு மரத்திற்கு தொழு உரம்- 50 கிலோ, வேப்பம் புண்ணாக்கு- 5 கிலோ, யூரியா- 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட்- 2 கிலோ மற்றும் மூரியேட்

ஆப் பொட்டாஷ்- 3.5 கிலோ என்ற அளவில் சரி பாதியாக பிரித்து ஆறு மாத இடைவெளியில் இரண்டு முறை இட வேண்டும்.

- ஒரு மரத்திற்கு 100 கிராம் *டிரைக்கோடெர்மா அஸ்பரெல்லம்,* 100 கிராம் *பேசில்லஸ் சப்டிலிஸ்,* 100 கிராம் அசோஸ்பைரில்லம், 100 கிராம் பாஸ்போபாக்டீரியா மற்றும் 50 கிராம் வேர்உட்பூசணம் ஆகியவற்றை 5 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து வருடத்திற்கு இரு முறை வட்டப்பாத்தியில் இட்டு மண்ணை கிளறிவிட வேண்டும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக் 40 மில்லியை 160 மில்லி தண்ணீருடன் கலந்து ஆண்டிற்கு இரண்டு முறை வேர் மூலம் செலுத்த வேண்டும்.
- இலை அழுகல் மற்றும் குருத்தழுகல் தென்பட்டால், ஒரு மரத்திற்கு 2 மில்லி ஹெக்சாகோனசோல் 5 EC பூசணக்கொல்லியை 300 மில்லி லிட்டர் தண்ணீரில் கலந்து மரத்தின் குருத்துப் பகுதியில் ஊற்ற வேண்டும்.
- நோய்க்காரணியை பரப்பும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான கண்ணாடி இறக்கை மற்றும் தத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை பொடி 200 கிராம் சரிவிகித மணலுடன் கலந்து மரத்தின் குருத்துப் பகுதியில் இடவேண்டும்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 'கோகோகான்' தாய் நுண்ணுயிர் கலவையை (5 லிட்டர்), கரும்புச்சர்க்கரை (10 கிலோ), தயிர் (5 லிட்டர்), சமையல் உப்பு (500 கிராம்) மற்றும் தண்ணீர் (150 லிட்டர்) உடன் கலந்து 5-7 நாட்கள் வளர்க்கவேண்டும். இவ்வாறு இனப்பெருக்கமான 'கோகோகான்' நுண்ணுயிரியை மரத்திற்கு 2 லிட்டர் என்ற அளவில் 8 லிட்டர் தண்ணீர் கலந்து வேர் பகுதி நன்கு நனையுமாறு மூன்று மாத இடைவெளியில் ஊற்றவேண்டும். 'கோகோகான்' தாய்க்கலவை கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் நோயியல் துறையில் கிடைக்கிறது.

**அடித்தண்டழுகல் நோய்**

தென்னையில் அடித்தண்டழுகல் நோயானது, கோவை, திருப்பூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, காவேரி டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் பரவலாக கண்டறியப்பட்டது. இந்நோயினை கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.

- பாதித்து இறந்த மரங்களை உடனடியாக வெட்டி அகற்ற வேண்டும்.
- பசுந்தாள் உரங்களான தட்டைப்பயறு, சணப்பை அல்லது தக்கைப்பூண்டு ஆகியவற்றை வட்டப்பாத்தி அல்லது தோப்பு பகுதி முழுவதும் வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுது விட வேண்டும்.
- ஒரு மரத்திற்கு வருடத்திற்கு 50 கிலோ தொழு உரம், 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 3.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் என்ற அளவில் சரி பாதியாக பிரித்து ஆறு மாத இடைவெளியில் இரண்டு முறை இட வேண்டும்.

- *ஒரு மரத்திற்கு* **100** *கிராம் டிரைக்கோடெர்மா ஏஸ்பரெல்லம்,* **100** *கிராம் பேசில்லஸ் சப்டிலிஸ்,* **100** *கிராம் அசோஸ்பைரில்லம்,* **100** *கிராம் பாஸ்போபாக்டீரியா மற்றும்* **50** *கிராம் வேர்உட்பூசணம் ஆகியவற்றை* **5** *கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து வருடத்திற்கு இரு முறை வட்டப்பாத்தியில் இட்டு மண்ணை கிளறிவிட வேண்டும்.*
- **1** *சத போர்டோ கலவை மரத்திற்கு* **40** *லிட்டர் என்ற அளவில் வேரை சுற்றி ஊற்றவேண்டும் (குறிப்பு- நுண்ணுயிரிகள் பயன்படுத்தி இருந்தால், போர்டோகலவை உபயோகத்தை தவிர்க்கவும்).*
- *ஒரு மரத்திற்கு ஹெக்சாகோனசோல்* 5 EC **2** *மி.லி என்ற அளவில்* **100** *மி.லி நீருடன் கலந்து* **3-4** *மாத இடைவெளியில் (நோயின் தீவிரம் பொறுத்து) வேர் மூலம் உட்செலுத்துதல்*

**காப்பி**

*சிவப்பு தண்டுத்துளைப்பான், வெள்ளை தண்டுத்துளைப்பான் மற்றும் காப்பி கொட்டை துளைப்பான் தாக்குதல் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் காணப்பட்டது. தண்டுத்துளைப்பான் தாக்ககுதலைக் கட்டுப்படுத்த*

- *காப்பி செடிகளுக்கு பொதுமான அளவு நிழல் ஏற்படுத்த வேண்டும்.*
- *மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தாக்கப்பட்ட செடிகளை சோதனை செய்து அழிக்க வேண்டும்.*
- *இனக்கவர்சிப் பொறிகளை ஏக்கருக்கு* **10** *எண்கள் வைக்கவேண்டும்.*
- *செடியின் தண்டுப்பகுதியில் ஒட்டி இருக்கும் மரத்துாள்களை தென்னை மட்டைகளை வைத்து அகற்ற வேண்டும்.*
- *தாக்கப்பட்ட தண்டுப்பகுதியில்* **5x5** *செ. மீ அளவில் துளைத்து குளோர்பைரிபாஸ்* **25** EC **50** *மிலி /* **10** *லிட்டர் என்ற அளவில் கலந்து பருத்திபஞ்சில் நனைத்து கட்டவேண்டும்.*

**காப்பி கொட்டை துளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்த**

- *சரியான நேத்தில் அறுவடை செய்ய வேண்டும்.*
- *உதிர்ந்து கிடக்கும் காப்பி கொட்டைகளை அறுவடை செய்யக்கூடாது.*
- *உதிர்ந்துகிடக்கும் காப்பி கொட்டைகளை சேகரித்து எறிதுது விடவேண்டும்.*
- *பருவம் மாறி காய்க்கும் காப்பி கொட்டைகளை சேகரித்து எறித்து விடவேண்டும்.*
- *காப்பி செடிகளுக்கு அதிகமான அளவு நிழல் கொடுக்க கூடாது.*
- *போதுமான அளவு கவாத்து செய்வதால் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்கும். இதனால் தாக்குதல் குறையும்.*
- *காப்பி கொட்டைகளை பரிந்துரைக்கப்பட்ட அளவு ஈரப்பதத்திற்கு காய வைக்க வேண்டும். (அராபிக்கா –ரொபஸ்டா* **10** *சதம். அராபிக்கா செர்ரி* **10.5** *சதம், ரொபஸ்டா செர்ரி* **11** *சதம்).*

**மிளகு**

இலை பேன் மற்றும் செதில் பூச்சி தாக்குதல் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் ஒரு சதம் 3 மிலி/ லிட்டர் அல்லது வேப்பெண்ணை (30 மிலி/ லிட்டர் அல்லது *பிவேரியா பேசியானா* 1.5 கிராம் / லிட்டர் மற்றும் லிட்டருக்கு ஒரு மி.லி ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

கொல்லிமலை மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மிளகு கொடிகளில் வாடல் நோய்களின் தாக்கம் அதிக அளவில் காணப்படுகிறது. இந்நோயினை கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை கொண்டு கட்டுப்படுத்தலாம்.

- நோய் தென்பட்டவுடன் போர்டோ கலவை (1 சதம்) அல்லது மான்கோசெப் 64% + மெட்டலாக்சில் 8% 72 WP கலவை மருந்தை லிட்டருக்கு 2 கிராம் என்ற அளவில் தெளிக்கவேண்டும்.
- பூஞ்சாணக்கொல்லிகள் பயன்படுத்தாத சமயத்தில் *டிரைக்கோடெர்மா அஸ்பரெல்லம்* (எக்டருக்கு 2.5 கிலோ) மற்றும் *பேசில்லஸ் சப்டிலிஸ்* (எக்டருக்கு 2.5 கிலோ) நுண்ணுயிரிகளை தொழு உரத்துடன் கலந்து பின் வேர்ப்பகுதியில் மண்ணில் இடவேண்டும்.

**10. மலர்ப்பயிர்கள்**

**மல்லிகை**

பூ மற்றும் மொக்கு துளைப்பான், பூ ஈக்களின் தாக்குதல் ஈரோடு மற்றும் மதுரை மாவட்டங்களில் காணப்பட்டது. பூ மற்றும் மொட்டுத் துளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்த *தயோகுளோப்ரிட்* 240 SC 10 மிலி/ 10 லிட்டர் அல்லது ஸ்பைனோசாட் 45 SC 5 மிலி / 10 லிட்டர் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

**தகவல்**

1. இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3, தொலைபேசி – 0422 6611237.
2. பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – 0422 6611214.
3. பேராசிரியர் மற்றும் தலைவர், நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – 0422 6611226.
4. பேராசிரியர் மற்றும் தலைவர், நூற்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – 0422 6611264.